# Sub Court, Eraniel

O.S. No.141/2023
Date: 09.03.2026.
PW3 - திரு. றசல் தாஸ்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைத் தொடர்ச்சி</u>

நான் மொழி சொல்லும் போது அடமானப்பத்திரம் எழுதுவதற்கு விபரங்களை எழுத்தரிடம் சொன்னது நான் தான் என்றால், முழுமையாக சரியல்ல. தொகைக்கு மட்டும் நான் சொன்னேன். மற்ற விபரங்களை பிரதிவாதி நாகராஜனும் அவருடைய வக்கீலும் சொன்னார்கள். அடமானப்பத்திரத்தில் 21.09.2022 அன்று 2 வாதிகளிடம் இருந்தும் ரூ.9,00,000/- பெற்றுக் கொண்டதாக எழுத்தரிடம் சொல்லிக் கொடுத்தேன் என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் அடமானப்பத்திரத்தில் ரூ.9,00,000/- பெற்றுக் கொண்டதாக சொல்லவில்லை. இதைத்தவிர வேறு அடமானப்பத்திரங்கள் இல்லை. ரூ.9,00,000/- கொடுத்ததாக சொன்ன சமயத்தில் அந்த தொகையை எவ்வாறு அதவாது ரொக்கமாக அல்லது DD ஆக அல்லது வங்கி கணக்கின் மூலமாக கொடுத்தேனா என்ற விபரத்தை நான் அவரிடம் சொல்லி கொடுத்தேன். அந்த விபரங்களும், அந்த அடமான பத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் என்றால், அதற்கு அவசியமில்லை. முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள விபரங்களை நான் தான் சொன்னேன். அதில் உள்ள பணம் ரூ.9,00,000/- எவ்வாறு கொடுக்கப்பட்டது என்ற விபரங்களை வாதிகள் சொன்னார்கள். நான் தாக்கல் செய்துள்ள சத்தியபிரமாண வாக்குமூலத்திற்கு நானும், வாதிகளும் தகவல் சொன்னோம் என்றால், சரிதான். 21.09.2022 அன்று ரூ.4,50,000/- மட்டும் பெற்றதாக சொல்லப்பட்டிருப்பது, சரிதான். அந்த தொகை ரூ.4,45,000/- ஆகும். இந்த ரூ.4,45,000/- வாதிகள் இருவரும் ரொக்கமாக கொடுத்த பணம். அந்த விபரம் எனக்கு தெரியும். பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு விபரம் சொல்லி கொடுத்தது வாதிகள் தான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பை நான் படித்து பார்த்தேன். 21.09.2022 அன்று வாதிகள் பிரதிவாதிக்கு பணம் கொடுத்த விபரம் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நோட்டீசில் வட்டி சதவிகிதம் சொல்லப்பட்டிருந்ததா என்ற விபரம் எனக்கு நினைவில் இல்லை. அந்த வழக்கறிவிப்பில் எத்தனை மாதங்கள், வருடங்களுக்கு வட்டியை பற்றிய விபரங்கள் சொல்லப்பட்டிருந்ததா என்ற விபரங்கள் எனக்கு நினைவில்

இல்லை. நான் குறிப்பிடுவது போல வட்டிக்கு கடன் கொடுக்காத காரணத்தால், எப்பொழுது கடன் கொடுக்கப்பட்டது, வட்டித் தொகை எவ்வளவு என்ற விபரங்கள் அந்த அறிவிப்பில் குறிப்பிடவில்லை என்றால், அது விபரங்கள் எனக்கு தெரியாது. பிராது தாக்கல் செய்ய வழக்கு விபரங்களை வாதிகள் தான் வழக்கறிஞரிடம் சொல்லியிருப்பார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 எனக்கு நாகராஜனால் அனுப்பப்பட்ட குறுஞ்செய்திகள். பக்கம் எண்.2 மற்றும் 3 ல் எந்த பண விபரமும் துலங்கவில்லை என்றால், சரியல்ல. பக்க எண்.4 ல் எந்த பண விபரமும் துலங்கவில்லை என்றால், சரியல்ல. வா.சா.ஆ.9 ல் நான் அவருக்கு அனுப்பிய குறுஞ்செய்திகளும், அதற்கு அவர் அனுப்பிய பதில் குறுஞ்செய்திகளும் உள்ளன. 14.12.2022 அன்று நான் அனுப்பிய Message க்கு அவர் பதில் அனுப்பவில்லை. 17.12.2022 அன்று நான் அனுப்பிய Message க்கும் அவர் பதில் அனுப்பவில்லை. 03.01.2023 அன்றைக்கு நான் அனுப்பிய Message க்கு 04.01.2023 ல் 4 தடவைகளாக ரூ.50,000/- வீதம் வைத்து ரூ.2,00,000/த்தை 1ம் வாதிக்கு நாகராஜன் வங்கி கணக்கில் அனுப்பியிருக்கிறார். அதற்கு தான் வா.சா.ஆ.9 ல் 4 ரசீதுகள் உள்ளன. 08.01.2023 அன்று நான் நகாராஜனுக்கு message அனுப்பியிருக்கிறேன். அந்த குறுந்தகவலில் வேலைக்கு பணம் கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன். கடன் கொடுத்தாக சொல்லவில்லை என்றால், சரிதான். ஆனால் முதலில் கடனாக தான் வாங்கினார். பின்னர் வேலை வாங்கி தருவதாக சொல்லி நாள் கடத்தினார். 12.01.2023 அன்று நான் அனுப்பிய குறுந்தகவல் இவர்கள் யார் யாரிடமோ நகைகளை கடன் வாங்கி வங்கியில் வைத்து வேலை உடனடியாக கிடைத்து விடும் என்று தந்தவர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறேன் என்றாலும், கடன் கொடுத்ததாக சொல்லவில்லை என்றால், அந்த செய்தியில் சொல்லவில்லை. ஆனால் கடன் கொடுத்தது உண்மை. வா.சா.ஆ.9 க்கு நான் அனுப்பிய குறுஞ்செய்திகளுக்கு நாகராஜன் பதில் குறுந்தகவல்கள் எதுவும் அனுப்பவில்லை என்றால், சரியல்ல. 10.01.2023, 11.01.2023 அன்றும் விபரமாக பதில் அனுப்பியிருக்கிறேன். அது அவருடைய செல்போன் எண் மேலே உள்ளது. அந்த செல்போனில் இருந்து அனுப்பப்பட்டது. அவ்வாறு அவருடைய செல்போனில் இருந்து அந்த குறுந்தகவல்கள் அனுப்பப்படவில்லை என்றால், சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.11 சான்றிதழ், அதனை வழங்கியவரின் மூலமாக சத்தியபிரமாணத்தின் வாக்குமூலமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால், அதை நான் தான் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.11 ல் எந்த company ன் phone number Device IMEI number அல்லது Device ன் company brand name ஆகியவை குறிப்பிடவில்லை என்றால், அது விபரங்கள் எனக்கு தெரியவில்லை. அதே மாதிரி எந்த computer ல் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது என்ற விபரங்கள் வா.சா.ஆ.11 ல் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். அது போல எந்த printer ல் இருந்து printout எடுக்கப்பட்டது என்று வா.சா.ஆ.11 ல் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.9 முதல் வா.சா.ஆ.11 ஆகியவை வழக்கிற்காக நான் தயார் செய்யப்பட்டவை என்றால், சரியல்ல. அந்த ஆவணங்கள் ஏற்புடையவை அல்ல என்றால், சரியல்ல. நான் வாதிகளுக்கு ஆதரவாக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. 21.09.2022 அன்று நாகராஜன் எந்த பணமும் வாதிகளிடம் இருந்து வாங்கவில்லை என்றால், சரியல்ல. எனவே வா.சா.ஆ.1 அடமானப்பத்திரம் ஏற்புடைய ஆவணம் அல்ல என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.